Registered as a News paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் (23 - 04 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 64

## திட்டமிட்டபடி இன்று விசேட பரீட்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் விசேட உயர்தரப்பரீட்சை திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகின்றது யாழ் மாவட்டத்தில் எழுபது பரீட்சை மண்டபங்களில் பன்னிரண்டாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவர்களில் நூறு பேர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இப்பரீட்சை (4 ஆம் பக்கம் பார்க்க)

### உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு

# வங்கி கடன் வழங்கத் தயார்; விண்ணப்பங்கள் இல்லை

## பிராந்திய முகாமையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கைக்காக கூட்டுறவுச்சங்கங்களுக்கு கடன் வழங்துவதற்கு மக்கள் வங்கி தயாராக இருக்கின்ற போதிலும் கடனைப் பெற்றுக்கொள்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் அக்கறை செலுத்தவில்லை'' இவ்வாறு மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் உப உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் கோருகின்ற அளவிற்கு அவர்களின் பயிர்ச்செய்கை தொடர்பான மாவட்ட விவசாயப் பணிப்பாளரின் சிபார்சுடன் கடன் வழங்குவதற்கு மக்கள் வங்கி எந்நேரமும் தயாராக இருக்கின்றது. ஆனால் இதுவரை மேற்படி பயிர்ச்செய்கைக்காக பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே கடன் கோரி விண்ணப்பித்திருக்கின்றது. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் கடனைப் பெற்று உபஉணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதில் அக்கறை செலுத்துவதாகஇல்லை.

கடனைப் பெற்றுக்கொள்ள விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள் தாம் செய்கைபண்ணும் நிலப்பரப்பு மற்றும் பயிர்வகை தற்பே தைய சூழலில் ஏற்படும் செலவு போன்ற அனைத்து விபரங்களுடனும் விண்ணப்பிக்குமிடத்து கடன் வழங்கப்படும் என்றும் முகாமை

(4ஆம் பக்கம் பார்க்க)

### கிராமிய கடன் கொடுப்பனவுகளை

## மக்களுக்கு வழங்க சங்கங்கள் தயக்கம்

(யாழ்ப்பாணம்)

கிராமியக்கடன் கொடுப்பனவுகளைப்பெற்று மக்களுக்கு அளிப்பதற்கு கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தயக்கம் காட்டி வருவதாக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தப் பணத்தைப்பெற்று மக்களுக்கு வழங்குவதற்கு கடந்த பல ஆண்டுகளாகிவிட்ட போதிலும் அவற்றின் நிர்வாக திறமையை தகுந்தவகையில் பயன்படுத்தி திட்டமிட்ட ரீதியில் செயற்படவில்லை என்று கூறினார். (லோ)

## கைப்பற்றப்பட்ட பின்னரே வவுனியாவிற்கு நிவாரணம்

### - ரத்நாயக்கா

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தினரால் வவுனியா மாவட்டத்தின் ஏனைய பகுதிகள் கைப்பற்றப்பட்ட பின்னரே அவ்விடங்களில் வாழும் மக்களுக்கு நிவாரண உணவுப் பொருள்கள் அனுப்பிவைககப்படும் என்று வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி வவுனியா கச்சேரியில் கிராம சேவையாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்தும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### இன்றைய பரீட்சை

## மாணவர்களுக்கு அல்ல கல்வித்திணைக்களத்திற்கே

### - சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

''இன்று ஆரம்பமாகும் கல்விப்பொதுத்தராதரஉயர்தரத்திற்கான பரீட்சை மாணவர்களுக்கு அல்ல; பரீட்சைத் திணைக்களத்திற்கும், கல்வி அதிகாரிகளுக்கும் பெற்றோருக்குமே பெரும் சோதனையாக உள்ளது. எனவே இப் பரீட்சை சிறப்புற நடைபெறுவதற்கு சகலரும் ஒத்துழைப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் கிறேசிக்கு வன்னியில் மக்கள் அஞ்சலி

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவத்துடன் மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த லெப். கேணல் கிறேசியின் புகழுடல் அவரின் சொந்த ஊரான வட்டக்கச்சியில் நேற்று முன்தினம் பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்றைய

(4ஆம் பக்கம் பார்க்க)

### மாறம்பைக்குளத்தில்

## கடத்தப்பட்டோர் பற்றி தகவல் எதுவும் இல்லை

(வவுனியா)

வவுனியா மாறம்பைக்குளம் பகுதியில் அண்மையில் இராணுவத்தினரால் கடத்திச்செல்லப்பட்டவர்கள் பற்றிய தகவல் எதையும் இராணுவ அதிகாரிகள் வெளியிடாத காரணத்தினால் கடத்தப்பட்டவர்களின் நிலைமைபற்றி அறிந்து கொள்ள முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில், பூந்தோட்டம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் இரவு வேளைமாறம்பைக்குளம்பகுதியில் உள்ள சோதி என்பவரின் குடும்ப உறுப்பினர் அனைவரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

மனைவி, குழந்தைகள் உட்பட மொத்தம் எட்டுப்பேர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மே தினத்தை ஒட்டி தீவிர முன்னேற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலக தொழிலாளர் தினமான மேதினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து நகரசபைகள், பிரதேசசபைகள் மற்றும் சனசமூக நிலையங்கள் போன்றவற்றில் சகல முன்னேற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முன்னேற்பாட்டுக்கான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மேலும் இந்த மாதம் 25ஆம் திகதி சகல சனசமூக நிலையங்களும் மேதின ஊர்வலத்தின்போது தமது நிலையம் சார்பாக மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுபற்றி தீர்மானித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கின்றன.

இந்தக் கூட்டங்களில் சகல சனசமூக நிலைய உத்தியோகத்தர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர். (க)

## பொது முகாமையாளர் இடைநிறுத்தம்

(ஈச்சமோட்டை

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் மு. சிவப்பிரகாசம் பதவி

(4ஆம் பக்கம் பார்க்க)

### பேராசிரியர் புல்ஜின்ஸ் கடத்தல்

# காமினி திஸநாயக்கா மீது பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமானகாமினி திஸநாயக்க, பேராசிரியர் புல்ஜின்ஸ் கடத்தல் தொடர்பாகக் கடந்த சனிக்கிழமை ஒன்றரை மணிநேரம் பொலிஸாரின் விசாரணைக்குள்ளாக்கப்பட்டார்.

பேராசிரியர்புல்ஜின்ஸ் கடத்தல் விவகாரம் 1988 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் இடம் பெற்றது. இது தொடர்பாக மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை காமினி திஸநாயக்கா மீது குற்றங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாவிட்டாலும் குற்றவாளி என்ற சந்தேகத்தின் பேரில் அவர் நேற்றுக்காலை நீதிபதி ஒருவர் முன் ஆஜர் செய்யப்பட்டார். பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் அதேவேளையில் எதிர்வரும் வெள்ளிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### 2ஆம் லெப். சீக்கோ

மன்னார் பரப்புக்கடந்தானில் கடந்த வெள்ளிக்கிழமையன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் சம்பவமொன்றில் 2ஆம் லெப். சீக்கோ (திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) என்பவர் வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வவுனியாவில் மே தினம்; பெரியளவில் ஏற்பாடு

(வவுனியா)

வவுனியாவில் எதிர்வரும் முதலாம் திகதி விடுதலைப் புலிகளின் ஆதரவில் மிகப் பெரும் மே தினக்கொண்டாட்டங்கள் இடம் பெறஉள்ளன

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிற்றூரவைகள், வட்ட அவைகள் இக்கொண்டாட்டங்களுக்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றன.

இத்தினத்தில் வவுனியா யாழ். வீதியில் உள்ள பன்றிக்கெய்தகுளம் சந்திப் பகுதியிலிருந்து பேரணி ஒன்று ஊர்வல

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய தியாகிகள் தியாகத்தை

# வீடுகள் அறியாமல் இருக்கலாம்

# வன்னி சாட்சி சொல்லும்

(யாழ்ப்பாணம்)

இன்றைய தியாகிகளின் தியாகத்தை எங்கள் வீடு அறியாமல் இருக்கலாம். ஆனால் வன்னி, முல்லைத்தீவில் உள்ள மரங்கள் ஒவ்வொன்றும் இவர்கள் தியாகத்திற்குச் சாட்சி கூறும் என்று குறிப்பிட்டார் அருட்திரு. ஆபரணம் சிங்கராயர்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நாம் கண்ட தலைமைத்துவத்திற்கும் இன்று நாம் காணும் தலைமைத்துவத்திற்கும் பாரிய வித்தியாசங்கள் உண்டு. முன்னையோர் மேடைப்பேச்சாளராக, பகுதி நேர அரசியல்வாதிகளாக, பாராளுமன்றக் கதிரைகளைப் பிடித்துக்கொண்டு தமிழர் பிரச்சினைகளை வெளிநாடுகளில் அறிவிப்பதற்காக வெளிநாடுகளில் சுற்றித் திரிந்தார்கள். இன்றைய தலைமைத்துவம் தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவம்; நம்பிக்கையுடனும், வீரத்துடனும் செயற்படுகின்றது. பல தியாகங்கள் நிறைந்ததாகவுள்ளது என்று பாலம் பொதுப்பணி மன்றத் தலைவர் அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் சத்திரம் திறப்பு விழாவில் உரை நிகழ்த்தும்போது தெரிவித்தார்.

பரி. யோவான் கல்லூரியின் முதலாண்டு மாணவன் சுரேன் பாபு குத்துவிளக்கேற்றி சத்திரத்தையும், பணிமனையையும் திறந்துவைத்தார்.

போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக மக்கள் பயணங்களைத் தொடர முடியாத நிலைபற்றி விளக்கிய அருட்திரு. சிங்கராயர் இந்தப் பயணிகளை, பாலம் அமைத்துள்ள சத்திரத்தைப் பாவித்துச் செல்லுமாறு அழைத்தார். அதே போன்று வெளி மாவட்டங்கள், தூர இடங்களிலிருந்து மருத்துவமனைகளிலும், யாழ். போதனா வைத்

**அருட்திரு. சிங்கராயர்**

தியசாலையிலும் உள்ள நோயாளிகளைப் பார்க்க பராமரிக்க வருவோருக்கும் சத்திரம் தன் அன்புக்கரங்களை நீட்டி வரவேற்கின்றது என்றார்.

பலர் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர். பாலத்தின் செயலர் சூ. சிறில் நன்றியுரை வழங்கினார்.

## பொதுச் சுகாதாரம் பேண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் பொதுச் சுகாதாரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு மாவட்டங்களிலும் கடந்த பல மாதங்களாக பொது சுகாதாரப்பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்த நிலையில் இருந்துவருகின்றது. இதற்குப் போதிய ஊழியர்கள் இல்லை என்று காரணம்கூறப்பட்டது இந்நிலைமையைநிவர்த்தி செய்வதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையான தற்காலிக ஊழியர்களுக்கு பொது சுகாதாரத்துறையில் பயிற்சி அளிப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிதி உதவி அளிக்க இருக்கின்றது. இவ்வாறு பயிற்சி அளிக்கப்படுபவர்கள் இம் மாவட்டங்களில் பொது சுகாதாரத்தைப் பேணுவதற்கு நியமிக்கப்படுவார்கள் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. கனகசபை தெரிவித்தார். (க)

## வன்னியில் உணர்வு பூர்வ அன்னை பூபதி நினைவு தினம்

(நமது நிருபர்கள்)

தியாகி அன்னை பூபதியின் மூன்றாமாண்டு நினைவுதினம் மணலாறு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் பொது மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இப்பகுதிகளில் வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அன்னை பூபதி உருவப்படம் வைக்கப்பட்ட நினைவுப் பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தன.

மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி, செம்மலை, அளம்பில் ஆகிய இடங்களில் அஞ்சலிக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மாவட்ட ரீதியிலான இறுதி நாள் சிறப்பு நிகழ்ச்சிகள் குமிழமுனையில் இடம்பெற்றன. இதில்மணலாறு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரமேஷ், முல்லைத்தீவு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செல்வம், மணலாறு மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி நித்திலா ஆகியோருட்பட பல முக்கியஸ்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து கவியரங்கு, இசை நடன நாடக நிகழ்ச்சிகள், களத்தில் காத்தான் சிந்து நடைக் கூத்து என்பன இடம் பெற்றன.

வன்னிப் பிரதேசத்திலும் அன்னை பூபதி நினைவு தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கிளிநொச்சி, மல்லாவி, கனகராயன்குளம், வட்டக்கச்சி, இரணை இலுப்பைக்குளம், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முத்தையன் கட்டு, கணேசபுரம், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அஞ்சலிக் கூட்டமும், பூபதி நினைவுக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## தேர்தலை முன்னிட்டு

# துப்பாக்கி உற்பத்தியாளர்களுக்கு மேலதிக வேலை நேரம்

(டில்லி)

பீகாரிலுள்ள சட்டவிரோத துப்பாக்கி உற்பத்தியாளர் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு சிலரை ஆயுதபாணிகளாக்கத் தொடங்கியுள்ளனர். அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இந்தியத் தேர்தலில் குழப்பத்தைத் தோற்றுவிக்கவே துப்பாக்கிகள் விநியோகிக்கப்படுகின்றன. இவ்வாறு பிரஸ் டிரஸ்ட் ஒவ் இந்தியா வெள்ளியன்று அறிவித்துள்ளது.

பீகாரில் பொலிஸாரின் குற்றப் பட்டியலில் பெயர் உள்ள 800 பேருக்குத் துப்பாக்கிகள் அவசரமாகத் தேவைப்படுவதால், சுமார் ஆயிரம் உள்ளூர் சட்டவிரோத துப்பாக்கி உற்பத்தியாளர் பட்னாவில் மேலதிக நேர வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி மேற்படி செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

முந்திய தேர்தலிலும் அரசியல் தலைவர்களால் பலர் இவ்வாறு பயன்படுத்தப்பட்டனர். பீகாரில் ஆண்டுதோறும் சுமார் 7,000 கொலைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இம்முறை வீட்டு வாசலிலேயே தேர்தலுக்கு முன் துப்பாக்கிகளை வழங்குவதற்கு ஆயுதத் தொழிற்சாலைகள் நடமாடும் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளன. சுமார் 10,000 ஆயுத வியாபாரிகள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் பி. ரி. ஐ. செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

## பஞ்சாப், அஸாம் தேர்தல்

# ஒத்திப் போடுதல் என்ற பேச்சிற்கே இடமில்லை

(டில்லி)

பஞ்சாப், அஸாம் மாநிலங்களில் சட்டப்பேரவை மற்றும் லோக்சபா தேர்தல் நடவடிக்கைகளை ஒத்திப்போடும் பேச்சுக்கே இடமில்லை என்று தலைமைத் தேர்தல் ஆணையகம் கூறியுள்ளது.

இந்த இரு மாநிலங்களிலும் வேட்புமனுத்தாக்கல் மற்ற மாநிலங்களைப் போலவே நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. எனினும் வாக்குப்பதிவு திகதி ஒத்திப்போடப்பட்டுள்ளது. நேற்று புதுடில்லியில் செய்தியாளரிடம்பேசிய தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு டி. என். சேஷன் பஞ்சாப்பில் புதிய தேர்தல் அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மீண்டும் புதியதாக தொடங்கப்பட வேண்டுமென காங்கிரஸ் மற்றும் மார்க்சிய கம்யூனிஸ்டுகளின் கோரிக்கை சாத்தியமற்றது என அவர்களிடம் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

தேர்தல்களில் கலந்துகொள்வதா இல்லையா என்பது அரசியல் கட்சிகளின் விருப்பத்தைப் பொறுத்த விஷயம். பஞ்சாப்பில் தேர்தலுக்குரிய சூழ்நிலை இல்லை என ஜனாதிபதி பிரகடனம் செய்து தேர்தலைத் தள்ளிவைப்பது இயலாத விடயம் என்றும் ஜனாதிபதிக்கோ தேர்தல் கமிஷனுக்கோ அத்தகைய அதிகாரம் இல்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

## குவைத் கரன்ஸிகளை நீக்க முடிவு

(குவைத்)

குவைத்தில், கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை வெளியிடப்பட்ட இப்போதைய கரன்ஸி நோட்டுக்களை புழக்கத்தில் இருந்து நீக்கி விடுவதென குவைத்தின் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இவற்றுக்குப் பதிலாக புதிய கரன்ஸிநோட்டுக்கள் புழக்கத்தில் விடப்படும் என்றும் வரும் செப்டெம்பர் மாதம் வரை பழைய நோட்டுக்களை மாற்றிக் கொள்ளலாம் என்றும் குவைத் மத்திய வங்கி தெரிவித்தது.

## ஜே. ஆர். ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

ஜப்பானில் தனது உருவத்தைக் கொண்ட அடையாளக் கல் ஒன்றை திறந்துவைப்பதற்காக சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜப்பான் சென்றுள்ளார்.

## லெப். கேணல் றீகன் நகரில் அன்னையின் நினைவாக

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைக்கருகாமையில் புதிதாக அமைந்துள்ள லெப் கேணல் றீகன் நகரில் அன்னைபூபதியின் நினைவாக நேற்றுமாலைகப்டன்ஜிம்கெலி சனசமூக நிலையமும், லெப் கல்கி பாடசாலையும், மட்டக்களப்பு அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் திரு. மோகனால் சம்பிரதாய பூர்வமாகத்திறந்துவைக்கப்பட்டது.

அத்துடன் மேஜர் அன்ரனி மேஜர் கண்ணன் வீதிகளும் திறந்துவைக்கப்பட்டன. இந்நினைவு வேலைத் திட்டங்களைமட்டக்களப்பில் இருந்து அண்மையில் வெளியேறிஅகதிகளாகத் தற்போதுதங்கியுள்ள அறுபதிற்கும் மேற்பட்டகுடும்பங்கள் ஒன்று சேர்ந்தே மேற்கொண்டன.

இதேவேளை தியாகச்சுடர் அன்னை பூபதி என்ற கைநூல் நீராவியடியில் உள்ள மட்டக்களப்பு-அம்பாறை தொடர்பகத்தினால் வெளியிடப்படுகிறது. அன்னையின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் விரிவாக இடம்பெற்றுள்ளது.


## படைப்பாளிகளுக்கு...

ஈழநாதம் வெள்ளி மஞ்சரிக்கான சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் உள்ளிட்ட பல்வேறு ஆக்கங்களும்படைப்பாளிகளிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை தபால் மூலம் அனுப்பி வைப்பது விரும்பத்தக்கது.


## நினைவு கூருகின்றோம்...

**1991-04-23**

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சினால் வீரமரணமடைந்த **ஸ்கொட்** (யேசுதாசன் ஸ்கொட் - உயிலங்குளம்)

அவர்களை

இந்நாளில் நினைவு கூருகின்றோம்

வேங்கையாய் எழுந்தாய் விண்பட நிமிர்ந்தாய்
வீரனாய் நின்று வீதியில் மடிந்தாய்
ஆயிரம், ஆயிரம் இளம்புலி வருவர்
ஆயுதம் எடுத்தே தாயகம் பெறுவர்.

— — —

இறப்பினும் மறவோம்
இலக்கினில் தவறோம்
விழ, விழ எழுவோம்
விழுதினை விடுவோம்.

— — —

சிந்திவடிந்திடும் எங்களின் ரத்தத்தில்
பூமி சிவக்கும் — புலி
பொங்கி எழுந்திடும் போர்க்களம் யாவிலும்
வெற்றி எடுக்கும்.

— — —

நீச்சுடர் ஏந்தித் திரிந்த புயலே!
தேச விடுதலை சுமந்த புலியே!
உந்தன் கனவைத் தோள்களில் ஏற்றி
எங்கள் பயணம் தொடரும்! தொடரும்!!

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2392)

### ❋ சிந்தனைக்கு ❋

அபாயம் எதுவுமின்றி, மகத்தானது
எதுவும், எப்பொழுதும் சாதிக்கப்பட்டதில்லை.
— நிக்கொலோ மாக்கியவெல்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 23-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05

# ஒருபுறம் ஆக்கல் மறுபுறம் அழித்தல்

சிறிலங்கா மீனவர்களின் எதிர்கால நன்மைக்காகவும், பாதுகாப்பிற்காகவும், சிறிலங்கா அரசாங்கம் மீனவருக்கான ஒய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. 1990 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்கத் தீர்மானத்தின்படி அமுலாக்கப்படும் இந்த ஒய்வூதிய சமூக பாதுகாப்புத் திட்டம் கடந்த 21 ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதியினால் நீர்கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

இத்திட்டத்தின் மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் வயோதிபப்பருவத்தில் தமது வாழ்க்கையை சிரமமின்றி நடத்தவும், தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் இழப்புக்களுக்கும் சேதங்களுக்கும் நஷ்ட ஈடு பெறவும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தொழிலாளி மரணமடையும் பட்சத்தில் இழப்பீடுகள், ஒய்வூதியம் என்பனவற்றைப் பெறுவதற்கு தொழிலாளியின் வாரிசுகளுக்கும் உரிமை உண்டு. இத்திட்டத்தினால் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நன்மை பெறுவார்கள் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக மீன்பிடித் தொழிலில் கருத்தும் கவனமும் செலுத்தும் சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாண மீனவர்களின் பிரச்சினைகளை திரும்பிப் பார்க்காததோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்திலும் அவர்களின் தொழில் நடவடிக்கைகளையும் அபிவிருத்தியையும் திட்டமிட்டு அழித்துவிடும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று இலட்சக் கணக்கான மீன்பிடித் தொழிலாளர்கள் தொழில் ஏதுமின்றி அகதிமுகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளார்கள். தமது தொழில் நடவடிக்கைக்காக கடற்பரப்பினுள் அவர்கள் இறங்க முடியாமல் உள்ளனர். பசி பட்டினியைத் தாக்குப்பிடிக்க முடியாத சிலர் கரையோரங்களில் கட்டுமரங்களில் மீன்பிடிக்கச் சென்றால் அவர்கள் திரும்பி வருவதே அபூர்வமானதாகவுள்ளது. கடற்படையினரின் அடாவடித்தனத்தால் மீன்பிடித் தொழிலாளர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கடலில் வீசப்பட்டுள்ளனர், அவர்களின் கட்டுமரங்கள் இயந்திரங்கள் கைப்பற்றப்படுகின்றன. பலருக்கு என்ன நடந்தது என்பதே தெரியாது.

அதேவேளை, இராணுவ நடவடிக்கையால் பல மீன்பிடிக்கிராமங்கள் அழிக்கப்பட்டும்விட்டன. இதனால் மக்கள் சொத்துக்களையும், தொழில் சாதனங்களையும் இழந்துள்ளனர். சில பகுதிகளில் மீன்பிடி வலைகளும், படகுகளும், இயந்திரங்களும் இராணுவத்தினரால் களவாடப்பட்டு சிங்களப் பிரதேசங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன. மிகுதியானவை தீ வைக்கப் பட்டுள்ளன.

அதாவது சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கையால் தமிழ் மக்களின் மீன்பிடித் தொழிலே முற்றாக அழிந்துவிட்டது. இலங்கையின் பிரதான மீன்பிடி வலயங்களில் ஒன்றான வட கடலோரப் பகுதியின் மீன்பிடி பெரும்பாலும் முற்றாகவே நின்றுவிட்டது எனலாம்.

இந்நிலையில் வடக்கில் இருக்கும் சீநோர் நிறுவனத்தையும் சிறிலங்கா அரசாங்கம் மூடிவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்துவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிறுவனம் ஒன்றே இலங்கையின் மீன்பிடியில் ஏறத்தாழ அரைவாசிப் பகுதியை ஈடு செய்த வடக்கு, கிழக்கு பகுதியில் இருந்த ஒரே ஒரு மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடைய நிறுவனமாகும்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது தமிழர் தாயகத்திலுள்ள உற்பத்தி நிலையங்களை முற்றாக மூடிவிடும் நடவடிக்கையின் ஓர் அம்சமாகும். அதாவது பொருளாதாரத் தடையின் ஒரு வடிவமாகும்.

ஒரு புறத்தில் ஆக்க நடவடிக்கை, மறுபுறத்தில் அழிப்பு நடவடிக்கை. இதுவே இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தின் கொள்கையாகும். சிறிலங்காவில் பதினைந்து லட்சம் வீடமைப்புத்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தமிழர்களின் பல்லாயிரக் கணக்கான வீடுகள் அழிக்கப்படுகின்றன. இதில் அழிக்கப்படும் தமிழர்களின் ஒவ்வொரு வீடும் ஆக்கப்படும் பல வீடுகளின் பெறுமதிக்குச் சமனானவையாகும். இதுபோன்றதே மீன்பிடி உள்ளிட்ட சகல உற்பத்தி நடவடிக்கைகளிலும்சிறிலங்காஅரசாங்கத்தின் கொள்கையாகும்.

இந்நிலையில் தமிழர்விழிப்பாக இருத்தல்வேண்டும். தமிழர் பொருளாதாரத்தைப் பாதுகாக்க திட்டமிடல் வேண்டும். சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கைகள் எடுப்பது போன்று பொருளாதார நடவடிக்கைகளுக்கும் எதிர் நடவடிக்கை வேண்டும். அப்போதுதான் தமிழர் பொருளாதாரமும், தமிழரும் பாதுகாக்கப் படமுடியும்.

# பத்து மாதத்தில் அனுப்பியவை 2 மாதத்திற்கே போதுமானது

சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு நாளைக்கு வாழ்வை ஒட்டுவதற்கு அவனுக்கு தேவைப்படும் சக்தியைக் கணக்கிட்டால் 2326·10 கலோரிப் பெறுமானம் கிடைக்கும். இந்தச் சக்தியை அவன் தனது உணவுப் பொருள்களிலிருந்து பெற்றுக் கொள்கிறான். அவ்விபரத்தை பட்டியலிட்டால் பின்வருமாறு அமைகின்றது:

| உணவு | கலோரி | புரதம் (கிராம்) | கொழுப்பு (கிராம்) |
|---|---|---|---|
| மாமிச உணவு | 126·70 | 12·46 | 5·72 |
| தாவர உணவு | 2199·80 | 40·16 | 42·83 |
| மொத்தம் | 2326·50 | 52·62 | 48·55 |

இக்கணிப்பீடு 1988ஆம் ஆண்டின் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டதாகும். தமிழ் மக்களை தனது குடிமக்கள் எனச் சொல்லிக் கொள்ள சிறிலங்கா அரசு அம்மக்களுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை வழங்க வேண்டியது கடமையாகும். இதற்காகவே கப்புல்கள்மூலம் வடபகுதிக்கு உணவுப்பொருள்கள் அனுப்பப்படுவதாக சிறிலங்கா அரசாங்கம் வாய்ஓயாமல் பிரசாரம் செய்வதுடன் புள்ளிவிபரங்களையும் அள்ளி வீசி உலகரங்கில் தனது இனவாதப் போக்கை மறைக்க முயற்சிகள் மேற்கொள்கின்றது.

இந் நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மட்டும் சிறிலங்கா அரசினால் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் பற்றிய ஒரு மதிப்பீட்டை நோக்குவது பொருத்தமானதாகும். கடந்த ஆண்டின் ஜூன் 11க்குப் பின்னர் இது வரையில் இருபத்தியொரு கப்பல்கள் பருத்தித்துறைக்கு வந்து உணவுப் பொருள்களை இறக்கிச் சென்றுள்ளன. இவற்றின் மூலம் பெறப்பட்ட முக்கிய உணவுப் பொருள்களின் விபரம் பின்வருமாறு அமைகின்றது:

முக்கிய உணவுப் பொருள்களின் விபரம் (மெற்றிக் தொன்களில்)

| | |
|---|---|
| அரிசி | 14967 |
| மா | 9791 |
| சீனி | 4961 |
| பருப்பு | 1502 |
| பயறு | 305 |
| மண்ணெண்ணை | 1374 |

பரல்கள் (274800 லீற்றர்)

யாழ். மாவட்டத்தின் நிரந்தர குடியிருப்பாளர்கள் சுமார் எட்டு லட்சமெனவும் பிற மாவட்டங்களில் இருந்துஇடம் பெயர்ந்தவர்கள் சுமார் இரண்டு லட்சம் எனவும் மதிப்பிட்டால் மக்கள் தொகை சுமார் பத்து லட்சமாகின்றது. இந்தப் பத்து லட்சம் மக்களுக்குமான ஒரு நாளைய நுகர்வுத் தேவையின் மதிப்பீடு பின்வருமாறு அமைகிறது:

| | | |
|---|---|---|
| அரிசி | 275 | மெ.தொன் |
| மா | 81 | மெ தொன் |
| சீனி | 61 | மெ.தொன் |
| பால் மா | 33 | மெ.தொன் |

இந்த அடிப்படையில் கணக்கிடும்போது யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு தேவையான முக்கிய உணவுப் பொருள்களின் அளவு பின்வருமாறு அமைகின்றது:

மெற்றிக் தொன்களில்:

| | |
|---|---|
| அரிசி | 1580 |
| மா | 553 |
| சீனி | 312 |
| பருப்பு | 155 |
| பர்ல்மா(பொதிகள்) | 156569 |
| மண்ணெண்ணை லீற் | 55360 |

12.07.90 இல் பருத்தித்துறைக்கு வந்த முதலாவது கப்பல் முதல் 10.04.91 இல் முடியும் பத்து மாத காலப் பகுதியிலும் சுமார் 21 கப்பல்களில் முக்கிய உணவுப் பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஒரு வாரத்திற்கு தேவையான முக்கிய உணவுப் பொருள்களின் அடிப்படையில் பங்கீடு செய்யப்பட்டிருப்பின் சிறிலங்கா அனுப்பிய பண்டங்கள் அரிசி சுமார் 55 நாட்களுக்கும், மா சுமார் 121 நாட்களுக்கும், சீனி சுமார் 82 நாட்களுக்கும் மட்டுமே போதுமானதாகும். சுமார் முன்னூறு நாட்களுக்குப் பொதுவாக இவற்றை சிறிலங்கா அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்தில் சுமார் பத்து இலட்சம் பேரும் சுமார் 2,15000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1,50000 வீடுகளில் குடியிருப்பதாக மதிப்பிடலாம். நாளொன்றுக்கு 100 மி·லீற்றர் மண்ணெண்ணை பாவிக்கப்படுவதாகக் கொண்டால் கூட சிறிலங்கா அனுப்பிய மண்ணெண்ணை அண்ணளவாக 0.2 நாளுக்குத்தான் போதுமானது.

இந்தப் புள்ளி விபரங்கள் சிறிலங்கா அரசு மனப்பூர்வமாக முக்கிய உணவுப்பொருள்களைத் தானும் வடபகுதி மக்களுக்கு அனுப்பி வைக்கவில்லை என்பதைத் தெளிவாக்கப் போதுமானதாகும். உணவுப் பொருள்களை தாமே அனுப்பிவைப்பதாக உலகரங்கில் பிரசாரம் மேற்கொள்ளவும், இங்குள்ள மக்களைப் போலிச் சமாதானங்களுக்கு உட்படுத்தவுமே இப்போதைய கப்பல்கள் அனுப்பப்படுகின்றன.

## ஒன்ராறியோ நகரில் முத்தமிழ் விழா நடந்தது

(ஒன்ராறியோ)

ஒன்ராறியோ நகரில் ஏப்ரல் 13 ஆம் திகதி தமிழரின் புது வருடப் பிறப்பை முன்னிட்டு முத்தமிழ் விழா நடத்தப்பட்டது. ஒன்ராறியோ மாநில சட்ட சபையின் சபாநாயகர் குத்துவிளக்கேற்றி சம்பிரதாய பூர்வமாக விழாவை ஆரம்பித்து வைத்தார். பிரதம விருந்தினராக முன்னாள் வீடமைப்பு அமைச்சரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான அலன்ரெட்வே கலந்து கொண்டார்.

கனடாவில் இயங்கும் உலகத் தமிழர் இயக்கம் இவ்விழாவை ஒழுங்கு செய்திருந்தது. இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களும், கணிசமான அளவு கனடிய மக்களும் அதில்கலந்து கொண்டனர். விழாவில்பல்கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இரத்தம் தேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை நோயாளர்களுக்கு இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இரத்ததானம் செய்யவிரும்புவோர் வைத்தியசாலைஇரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (25)

## ஊழியர்களுக்கு உதவி

கடந்த வருடம் ஜூன் மாதத்திற்குப் பின்னரான காலத்தில் அகால மரணமடைந்த அல்லது காணாமல் போன வாழைச்சேனை காகித ஆலை ஊழியரின் குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை அலுமினியப் பாத்திரங்கள், பிளாஸ்டிக் வாளிகள், கோப்பை, தேநீர் கோப்பை போன்ற பொருள்களை நிவாரண உதவியாக வழங்கி உள்ளது.

காகித ஆலை ஊழியர் பொதுநலன் பகுதியினர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்த உதவிகள் கிடைக்கப் பெற்றனஎனவும், மேலும் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக முயற்சிக்கப் படுவதாகவும் காகித ஆலை முகாமையாளர் இ. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

## சிறிலங்கா எவரையும் சுமையாகக் கருதாதாம்

(கொழும்பு)

நாட்டில் பிறக்கும் எவரையும் ஒரு சுமையாக அரசாங்கம் ஒரு போதும் கருதாது. கட்டணம் எதுவுமில்லாத சமூக பாதுகாப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்படும். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி நீர்கொழும்பில் காப்புறுதித் திட்டமொன்றைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டு வருவதனால்சமூககாப்புறுதித்திட்டம் செயற்பட கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, ஒருவர் பிறந்தது முதல் பெரியவராகும் வரை அவருக்கு வசதிகள் வழங்கப்பட வேண்டியதுடன் பிறப்பு முதல் இறப்பு வரையான நலன்களை பேணுவதற்கான காப்புறுதி செய்வதுபற்றி அரசாங்கம் ஆலோசிப்பதாகவும் கூறியுள்ளார்.

## உதவிப் பணத்தைப் பெறவும்

(பருத்தித்துறை)

யாழ். சமூக சேவைத் திணைக்களத்தால் கசநோய், புற்றுநோய், தொழுநோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப் பட்டு வரும் மாதாந்த உதவிப்பணம் பருத்தித்துறை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் இவ் வுதவிப் பணத்தினைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக சேவை உத்தியோகத் தருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## முதலுதவி நிலையம்

பருத்தித்துறை இறங்கு துறைக்கு அருகாமையில் சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கம் "முதலுதவி" நிலையமொன்றை ஆரம்பித்துள்ளது. கப்பலிலிருந்து பொருட்களை இறக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நலன் கருதியே இம்முதலுதவி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரபுக்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில்

# நேரடிப் பேச்சு நடைபெறும் வரை மேற்காசியாவில் அமைதி இல்லை

(டில்லி)

இஸ்ரேலும் அரபுக்களும் தமக்குள் விட்டுக் கொடுத்து பேச்சு வார்த்தைக்கு முன்வரா விட்டால் தன்முயற்சியைக் கைவிடப்போவதாகஅமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் இஸ்ரேலிடம் தெரிவித்துள்ளதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளதாக பி.ரி.ஐ. அறிவித்தது.

அரபுக்களும், இஸ்ரேலும் நேரடியாக பேச்சு வார்த்தைகளில் ஈடுபடாதவரை மேற்காசியாவில் அமைதி ஏற்படப் போவதில்லையென்றும் இப்படிப் பேச்சு நடத்துவதுஎன்றுயோசிப்பதைவிட பேச்சுக்களை தொடக்குவது என்பதே முக்கியமானது என்றும் ஜேம்ஸ்பேக்கர்கெய்ரோவில் செய்தியாளரிடையில் பேசும் போது கூறினார்.

இதேவேளை மேற்காசியா தொடர்பான எந்த ஒரு சமா

## ஜேம்ஸ் பேக்கர்

தான மாநாட்டிலும் பங்கேற்கப் போவதில்லை என்று சவுதி அரேபியா திரு. பேக்கரிடம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

லெப். கேணல்

தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் வைக்கப்பட்டிருந்த வீர வேங்கையின் புகழுடலுக்கு மாணவர்களும், பொதுமக்களும் கதறி அழுத வாறு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்பின்னர் பாண்டியன் குளம், மல்லாவி பிரதேச மக்களின் இறுதி அஞ்சலிக்காக அப் பகுதிகளில் புகழுடல் வைக்கப்பட்டது. வெயிலையும் பொருட்படுத்தாதுபொது மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக அமைக்கப்பட்ட விசேட மேடையில் புகழுடல் வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பொது மக்கள் கண்ணீர்மல்க தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இறுதியாக விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் மயானத்தில் மாலை 6-30 மணியளவில் வீரவேங்கையின் புகழுடல் தகனஞ் செய்யப்பட்டது. (மு)

வங்கி கடன்

யாளர் தெரிவித்தார். மேலும் தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் ஏனைய பகுதிகளை விட இங்கு நிலவும் விலை வாசி உயர்வைக் கருத்திற்

## மானிப்பாய் வாசியிடம் 1 கிலோ 285 கிராம் தங்கம்

(வவுனியா)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக அண்மையில் வவுனியாவந்தடைந்த வாலிபர் ஒருவரை சோதனையிட்ட பொலிசார் அவரிடம் இருந்து 1 கிலோ 285 கிராம் எடையுள்ள தங்கப் பாளங்களைக் கண்டு பிடித்தனர். மானிப்பாயைச் சேர்ந்த இந்த வாலிபர் குவைத்தில் தொழில் செய்துவிட்டு அண்மையில்நாடு திரும்பியவர்.

11 தங்கப்பாளங்களை அட்டைப்பெட்டி ஒன்றின் இரு பக்கங்களிலும் இவர் மறைத்து ஒட்டி வைத்திருந்தாராம் இவரிடம் இருந்த தங்கத்தின்பெறுமதி சுமார் ஒன்பது இலட்சம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (85)

## கடிதங்களை தபாலில் சேர்க்கவும்

தற்பொழுது பருத்தித்துறையில் தங்கி நிற்கும் ''லில்லி'' கப்பல் 25.04.91 வியாழக்கிழமை காலை கொழும்பு நோக்கிப் புறப்படுமென எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் தங்கள் கடிதங்களை 24.04.91 புதன்கிழமை பகல் 12 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் தபாலில் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக்கோட்டப் பிரிவில் கடமை புரியும் சகல அதிபர்களையும் நாளை புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்கு வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (மு)

மாணவர்களுக்கு

தரவேண்டும்'', என்று யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் பலபகுதிகளில் இருந்தும் தொடர்ந்தும் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர் இதனால் கல்வி அதிகாரிகளுக்கும் பரீட்சைத்திணைக்களத்திற்கும் பெரும் சிக்கல்கள் தோன்றுகின்றன. முற்றிலும் அசாதாரண சூழ்நிலையில் நடாத்தப்படும் மேற்படிபரீட்சைக்கு பெற்றோர்கள் பழையமாணவர்கள் போன்ற சகல தரப்பினரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று அவர்

## வயோதிபர் மீது தாக்குதல்

இரவுவேளை பதுங்கியிருந்த நபரொருவர் வீதியால்சென்று கொண்டிருந்த வயோதிபரொருவரைப் பயங்கரமாகத்தாக்கி பலத்த காயங்களுக்குள்ளாக்கியதையடுத்து காயப்பட்டவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நாகர் கோவில் வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் சுந்தரம்பிள்ளை(வயது62) என்பவரே தாக்கப்பட்டவராவார். (25)

கடத்தப்பட்டோர்

மேற்படி இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்களின்தற்போதையநிலை பற்றி உறவினர்கள் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் பற்றிய எதுவித தகவல்களையும் பெறமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா எல்லைப்புறக் கிராமப்பகுதியில் நிலை

## அராலியில் ஹெலி தாக்கு பயணி ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அராலித்துறையில் நின்ற பொதுமக்கள்மீது நேற்று ஹெலிகொப்டர் தாக்குதலை மேற்கொண்டதில்தீவுப்பகுதிக்குச்செல்வதற்காககாத்துநின்ற பொதுமக்களில் ஒருவர் படுகாயமுற்றார். ஏனையோர் சிதறியோடி உயிர் தப்பினார்கள்.

இச்சம்பவம் நேற்று மாலை இரண்டு முப்பது மணியளவில் இடம்பெற்றது. இதில் காயமடைந்த எ. கைலாயநாதன் என்ற முப்பத்திமூன்று வயது இளைஞர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகிறார். (லோ)

## சாராய உற்பத்தி நிலையம் தீப்பிடித்து சாம்பலானது

(கொடிகாமம்)

பனஞ் சாராய உற்பத்தி நிலையம் ஒன்று சடுதியாகத் தீப்பிடித்துச் சாம்பலாகியது.

இச்சம்பவம் நேற்றுமுன்தின மிரவு 7 மணியளவில் வரணியைச் சேர்ந்த கறுக்கால் என்னும் கிராமத்தில் நடைபெற்றது. இதனால் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையத்தில் இருந்த சகல பொருள்களும் சாம்பலாகின. (86)

## சந்திரசேகர் யூ. பி.யில் அத்வானி புதுடில்லியில்

(டில்லி)

நேற்றும் பல முக்கிய தலைவர்கள் தமது வேட்பாளர் மனுக்களைத் தாக்கல் செய்தனர் பிரதமமந்திரி சந்திரசேகர் உத்தரப்பிரதேசம் மாநிலம் பரியா லோக் சபாத் தேர்தல் தொகுதியிலிருந்து வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். மத்திய அமைச்சர்களான சுபாத்கான் பிகார் மாநிலத்தில் ராஞ்சித் தொகுதியிலிருந்தும், ஹரிமோகன் தவான் சாந்திக் கட்டிலிருந்தும் லோக்சபைத் தேர்தலுக்கான தமது வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிருஷ்ணா அத்வானி புதுடில்லி லோக்சபைத் தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார்.

## புள்ளிவிபரங்கள் திரட்ட செயலக. முடியவில்லை

(யாழ்ப்பாணம்)

ஊழியர் பற்றாக்குறையால் யாழ். செயலக புள்ளிவிபரப் பகுதியினர் இவ்வாண்டிற்கான மாவட்டத்தின் பல்தரப்பட்ட புள்ளிவிபரங்களைத் திரட்ட முடியவில்லை.

மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகப் புள்ளிவிபரங்களைத் திரட்டுவதற்கு மட்டும் மொத்தம் 14 வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை. ஆனால் தற்போது ஒரேயொரு வெளிக்கள உத்தியோகத்தர் மட்டுமே கடமையாற்றுகின்றார். இதனால் இவ்வாண்டிற்கான வெளிக்கள வேலையை ஆரம்பிக்க முடியவில்லை என்று இப்பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் புள்ளிவிபர வேலைகள் ஊழியர் பற்றாக்குறையால் ஒருவருடம் தடைப்படுமாயின் ஒவ்வொரு விடயம் தொடர்பான இறுதி அறிக்கையைத் தயாரிக்க முடியாமல்போய் விடும் என்றும், இதனால் மாவட்டத்தின் எதிர்கால திட்டமிடல் வேலைகள் மிகவும் சிரமமானதாக அமைந்துவிடு

## அருண் நேரு வெளியேற்றப் பட்டார்

(டெல்கி)

அருண் நேருவும் வேறு இரு தலைவர்களும் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக ஜனதா தளக்கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர். அருண் நேரு ஆரிக் முகமத்கான், சத்தார்மல்லிக் ஆகியோர் ஜனதா தளத்திலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து ஸ்ரீ ராம் தள்ளுடன் சேர்ந்து கொண்டு முன்னாளைய ஜனமோத்தாவைப் புதுப்பித்தனர்.

## இளைஞன் காயம்

லெப். கேணல்
தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.
வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் வைக்கப்பட்டிருந்த வீரவேங்கையின் புகழுடலுக்கு மாணவர்களும், பொதுமக்களும் கதறி அழுத வாறு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி கலந்து கொண்டு உரையாற்றினார்.
இதன்பின்னர் பாண்டியன் குளம், மல்லாவி பிரதேச மக்களின் இறுதி அஞ்சலிக்காக அப் பகுதிகளில் புகழுடல் வைக்கப்பட்டது. வெயிலையும் பொருட்படுத்தாதுபொது மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக அமைக்கப்பட்ட விசேட மேடையில் புகழுடல் வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பொது மக்கள் கண்ணீர்மல்க தமது அஞ்சலியைச் செலுத்தினர்.
இறுதியாக விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் மயானத்தில் மாலை 6-30 மணியளவில் வீரவேங்கையின் புகழுடல் தகனஞ் செய்யப்பட்டது. (மு)

**வங்கி கடன்**

யாளர் தெரிவித்தார். மேலும் தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் ஏனைய பகுதிகளை விட இங்கு நிலவும் விலைவாசி உயர்வைக் கருத்திற் கொண்டு ஏற்படும் செலவுக்கேற்ப தாம் கடன்வழங்கு வதற்கு தயாராக இருப்பதாகவும் கூறினார். (க)

**திட்டமிட்டபடி**

நடைபெறும் பாடசாலைகளுக்கு அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையின் கீழ் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் பரீட்சை நேரங்களில்வெளியாரின் தலையீடுகளின்றிப் பரீட்சைகள் நடைபெற உதவி புரிவார்கள் எனவும், விமானத் தாக்குதல் களிலிருந்து பாதுகாப்பதற்காக பரீட்சைமண்டபங்களின் மேலும், வினாத்தாள்களைக் கொண்டு செல்லும் வாகனங்களிலும் வெள்ளை, நீல நிறக் கொடி பறக்க விடப்படுமென வும், இப்பரீட்சைகள் சிறப்புற நடக்க அனைவரையும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு.சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். இப்பரீட்சை இன்று தொடக்கம் எதிர்வரும் 18-ம் திகதிவரைநடைபெறவுள்ளது. (ச)

எடையுள்ள தங்கப் பாளங்களைக் கண்டு பிடித்தனர். மானிப்பாயைச் சேர்ந்த இந்த வாலிபர் குவைத்தில் தொழில் செய்துவிட்டு அண்மையில்நாடு திரும்பியவர்.
11 தங்கப்பாளங்களை அட்டைப்பெட்டி ஒன்றின் இரு பக்கங்களிலும் இவர் மறைத்து ஒட்டி வைத்திருந்தாராம் இவரிடம் இருந்த தங்கத்தின்பெறுமதி சுமார் ஒன்பது இலட்சம்

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)
வேலணைக் கல்விக்கோட்டப் பிரிவில் கடமை புரியும் சகல அதிபர்களையும் நாளை புதன்கிழமை முற் கல் பத்து மணிக்கு வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (மு)

**மாணவர்களுக்கு**

தரவேண்டும்'', என்று யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.
மாணவர்கள் பலபகுதிகளில் இருந்தும் தொடர்ந்தும் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர் இதனால் கல்வி அதிகாரிகளுக்கும் பரீட்சைத்திணைக்களத் திற்கும் பெரும் சிக்கல்கள் தோன்றுகின்றன. முற்றிலும் அசாதாரண சூழ்நிலையில் நடாத்தப்படும் மேற்படிபரீட்சைக்கு பெற்றோர்கள் பழைய மாணவர்கள் போன்ற சகல தரப்பினரும் ஒத்துழைப்புத் தர வேண்டு மென்று அவர் கோரிக்கைவிடுத்துள்ளார். (க)

**பொது**

யிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். சிவப்பிரகாசத்தை இடைநிறுத்தி வைத்திருப்பதை ஆட்சேபித்து யாழ். பல நோ. கூ. சங்க ஊழியர்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் அனைவரும் நேற்று கறுப்புப் பட்டியணிந்து கடமைக்கு சமுகமளித்தனர். (43)

**கைப்பற்றப்பட்ட**

வவுனியா மாவட்டத்தில் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளுக்கு கடந்த செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் எதுவித நிவாரண உணவுப் பொருள்களும் வழங்கப் படவில்லை என்பது தெரிந்ததே.
இது பற்றி கிராம சேவையாளர் மேற்படி மேலதிக அரசாங்க அதிபரிடம் வினாவிய போது இராணுவம் மிக விரைவில் வவுனியா மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றும்.அதன்பின்பே மக்களுக்கான உணவுப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

## சேர்க்கவும்

தற்பொழுது பருத்தித்துறையில் தங்கி நிற்கும் ''லில்லி'' கப்பல் 25.04.91 வியாழக்கிழமை காலை கொழும்பு நோக்கிப் புறப்படுமென எதிர் பார்க்கப்படுவதால் பொதுமக்கள் தங்கள் கடிதங்களை 24 04.91 புதன்கிழமை பகல் 12 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் தபாலில் சேர்க்குப்படி கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

## வயோதிபர் மீது தாக்குதல்

இரவுவேளை பதுங்கியிருந்த நபரொருவர் வீதியால்சென்று கொண்டிருந்த வயோதிபரொருவரைப் பயங்கரமாகத்தாக்கி பலத்த காயங்களுக்குள்ளாக்கியதையடுத்து காயப்பட்டவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.
நாகர் கோவில் வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் சுந்தரம் பிள்ளை(வயது62) என்பவரே தாக்கப்பட்டவராவார். (25)

**கடத்தப்பட்டோர்**

மேற்படி இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்களின்தற்போதையநிலை பற்றி உறவினர்கள் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் பற்றிய எதுவித தகவல்களையும் பெறமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
வவுனியா எல்லைப்புறக் கிராமப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் இவ்வாறு பல தமிழ்ப் பொதுமக்கள் கடத்தப்பட்டு காணாமல் போகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

**காமினி**

கிழமை பேராசிரியர் புல்ஜின்ஸின் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகும் போது காமினி திஸநாயக்காவும் ஆஜராகவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.
இவ்விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்ட காமினி திஸநாயக்கா இச்சம்பவத்திற்கும் தனக்கும் தொடர்பில்லை எனவும் தான் அரசியல் மிரட்டல்களுக்கு உள்ளாகியிருப்பதாகக் கூறினார்.
மேலும் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட காமினி திஸநாயக்கா இது தொடர்பாக தான் கவலையடையவில்லையென்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பதவியில் இருப்பவர்கள் தங்கள் எதிரிகளை அகற்றும் முறையில் எவ்வாறு ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதற்கு இது ஒருநல்ல உதாரணம் எனவும் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(டில்லி)
நேற்றும் பல முக்கிய தலைவர்கள் தமது வேட்பாளர் மனுக்களைத் தாக்கல் செய்தனர் பிரதமமந்திரி சந்திரசேகர் உத்தரப்பிரதேசம் மாநிலம் பரியா லோக் சபாத் தேர்தல் தொகுதியிலிருந்து வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். மத்திய அமைச்சர்களான சுபாத்கான் பீகார் மாநிலத்தில் ராஞ்சித் தொகுதியிலிருந்தும், ஹரிமோகன் தவான் சாந்திக் கட்டிலிருந்தும் லோக்சபைத் தேர்தலுக்கான தமது வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிருஷ்ணா அத்வானி புதுடில்லி லோக்சபைத் தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார்.

## புள்ளிவிபரங்கள் திரட்ட செயலக. முடியவில்லை

(யாழ்ப்பாணம்)
ஊழியர் பற்றாக்குறையால் யாழ். செயலக புள்ளிவிபரப் பகுதியினர் இவ்வாண்டிற்கான மாவட்டத்தின் பல்தரப் பட்ட புள்ளிவிபரங்களைத் திரட்ட முடியவில்லை.
மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகப் புள்ளிவிபரங்களைத் திரட்டுவதற்கு மட்டும் மொத்தம் 14 வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை. ஆனால் தற்போது ஒரேயொரு வெளிக்கள உத்தியோகத்தர் மட்டுமே கடமையாற்றுகின்றார். இதனால் இவ்வாண்டிற்கான வெளிக்கள வேலையை ஆரம்பிக்க முடியவில்லை என்று இப்பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் புள்ளிவிபர வேலைகள் ஊழியர் பற்றாக்குறையால் ஒருவருடம் தடைப்படுமாயின் ஒவ்வொரு விடயம் தொடர்பான இறுதி அறிக்கையைத் தயாரிக்க முடியாமல்போய் விடும் என்றும், இதனால் மாவட்டத்தின் எதிர்கால திட்டமிடல் வேலைகள் மிகவும் சிரமமானதாக அமைந்துவிடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## அருண் நேரு வெளியேற்றப் பட்டார்

(டெல்கி)
அருண் நேருவும் வேறு இரு தலைவர்களும் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக ஜனதா தளக்கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர். அருண் நேரு ஆரிக் முகமத்கான், சத்தார்மல்லிக் ஆகியோர் ஜனதா தளத்திலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து ஸ்ரீ ராம் தள்ளுடன் சேர்ந்து கொண்டு முன்னாளைய ஜனமோத்தாவைப் புதுப்பித்தனர்.

## இளைஞன் காயம

(யாழ்ப்பாணம்)
நாரந்தனையில் ஹெலித் தாக்குதலுக்கு அஞ்சிய இளைஞன் மதகில் இருந்து குதித்து படுகாயமடைந்துள்ளார்.
நேற்றையதினம் நாரந்தனைப்பகுதியில் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொள்ளப்பட்டபோது அதிலிருந்துதப்புவதற்காக மதகிலிருந்துகுதித்த அன்ரன்பிரேமதாஸ் (வயது27 நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை) என்பவர் கால்கள் முறிந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்றிரவு அனுமதிக்கப் பட்டுள்ளார். (மு)

**வவுனியாவில்**

மாகப் புறப்பட்டு ஓமந்தைவந்தடைந்த பின்னர் ஓமந்தைப் பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெறும்
மேற்குறிப்பிடப்படும் பேரணி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கானமக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.
ஓமந்தையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள்மக்கள்முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது (தி)

## பொய்க்கால் குதிரை ஆட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரின் மத்திய பகுதியில் பொய்க்கால் குதிரை ஆட்டமும் தெருக் கூத்தும் நேற்று இடம்பெற்றது இந்த நிகழ்ச்சி மூலம் மேதினத்திற்கு அனைத்து யாழ். உதவி அரசஅதிபர் பிரிவில் உள்ள தொழிலாளர்களையும் பங்குபற்றவரும் படி அழைப்புவிடுக்கப்பட்டது. இதனை ஏராளமான மக்கள் சுற்றிநின்று வேடிக்கை பார்த்தனர். (லோ)

## காஷ்மீரில் 13பேர் பலி

(டில்லி)
காஷ்மீர் பள்ளத்தாக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தனித்தனி மோதல்களில் 8 தீவிரவாதிகள் உட்பட 13பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாராமுல்லா மாவட்டத்தின் தடைசெய்யப்பட்ட இயக்க வட்டாரத் தளபதி உட்பட அவரது சகாக்கள் 6 பேரும் சண்டையில் கொல்லப்பட்டுள்ளனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.